(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மானியத் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடனும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடனும் மற்றும் ஆதி திராவிடர் துறையின் சிறப்புத் திட்டங்கள் மூலமும் மீனவர்களுக்கு விசைப் படகு, கட்டு மரம், வலை நூல் இவை மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மீன்பிடி விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கை-அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதியில், விஷ சக்தி வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதால், மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

*5429 திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் யூனியனில் குழிப்பாந்தண்டலம் ஊராட்சியில் மீண்டும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு தொகுதி திருக்கழுக்குன்றம் யூனியன் குழிப்பாந்தண்டலம் ஊராட்சி மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவாக உள்ளதாலும் தற்போது இப்பகுதியில் உள்ள கால்நடைகளின் தேவைக்கு திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனை போதுமானதாக உள்ளதாலும் மீண்டும் இக்கிளை நிலையத்தினைத் துவக்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேல் ஆகிறது. அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இன்றைக்கு, பால் வளத்தைப் பெருக்குகின்ற அளவுக்கு புதிய சங்கங்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கங்கள் மூலமாக ஒவ்வொரு பால்வள சங்கத்திற்கும் 50 மாடுகளுக்கு மேல் இன்றைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே மீண்டும் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழிப்பாந்தண்டலம் மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 4,340 தான் என்று என்னிடம் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ''இப்போது அதிகமாக கால்நடைகள் வாங்கப்பட்டு வழங்கப்பட்டு இருக்கின்றன; அதன் அடிப்படையிலே, மீண்டும் மருத்துவமனை துவங்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவ்வாறு, இப்போதுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு மீண்டும் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-40 மணி

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டில் புதிதாகத் துவங்க இருக்கிற 10 கால்நடை மருந்தகங்களில் ஒன்றாக இது இணைத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆய்வு செய்து, அதற்குப் பின்புதான் முடிவெடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை மருத்துவமனை திறப்பதற்குக் குறைந்த பட்சக் கால்நடைகள் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே குறைந்த பட்சக் கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். கால்நடைகள் என்று சொல்கிறபோது, எந்தெந்தக் கால்நடைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சம் 20,000 கால்நடைகளுக்கு மேலாக இருக்குமானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். 20,000 கால் நடைகள் என்று சொல்லும்போது, Breedable cattle population என்று சொல்லக் கூடிய இன விருத்திக்குத் தகுதி வாய்ந்த கால்நடைகளைக் கணக்கில் எடுத்து, ஆய்வு செய்யப்படுகிறது. உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால், அவசியத் தேவையிருப்பின், முன்னுரிமை கொடுத்து அங்கே இருக்கும் அவசியத் தேவையை உணர்ந்து, இதில் அரசு முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''கால்நடைகள்'' என்று சொல்லும்போது, அந்தக் கால்நடைகளுக்கு எத்தனை கால்கள் இருக்க வேண்டுமென்பதையும் கணக்கில் எடுப்பீர்களா? (சிரிப்பு)

திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

*3144—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) Common good fund என்னென்ன பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பொதுநல நிதியில் இருந்து அங்கத்தினர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (Medical) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடை, கல்வி, உதவித் தொகை, பயிற்சிக் கட்டணம், பத்தாம் வகுப்பு, +2 மாணவர் முதல் மதிப்பெண் உதவித் தொகை, தினசரி பேப்பர்கள் போன்ற கல்வி இனங்களுக்கும், இலங்கைத் தமிழர் நிதி உதவி, நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை போன்ற இனங்களுக்கும் செலவிட்டுள்ளது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் ''காமன் குட்ஃபண்ட்'' மூலமாகக் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டதற்கு